## இயல் - 2

## அற இலக்கியங்களில் கல்விச் சிந்தனைகள்

உலகில் பிறந்த ஒவ்வருவரும் இயற்கையில் அறிவு உடையவர்களே. அறிவை வளர்த்துக் கொள்ள கல்வி தேவை. கல்வி, அறியாமையைப் போக்கி அறிவை வளரச் செய்யும் தன்மை கொண்டது. கல்வி, மனிதனுக்குத் தேவையான ஒன்றாகும். மனிதனின் அறிவைப் பெருகச் செய்வது கல்வியாகும். தனிமனிதனுக்குத் தேவைப்படும் கல்வி சமுதாய வளர்ச்சிக்கு மிகவும் தேவையான ஒன்றாகும். இவ்வியலில் அறஇலக்கியங்களில் கல்வி வெளிப்படும் நிலை குறித்தும் அதன்சிறப்பு குறித்தும் ஆராயப்பட உள்ளது.

### கல்வியின் சிறப்பு

அறஇலக்கியங்களில் கல்வி குறித்த சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன. திருக்குறளில் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை முதலான அதிகாரங்களின் வழி கல்வியின் முக்கியத்துவம் விளக்கப்படுகிறது. இலக்கியங்களில் மகனுக்குக் கல்வியைப் போதிக்கச் செய்வது தந்தையின் கடமைகளில் ஒன்றாகக் கூறுவதன் மூலம் கல்வியின் முக்கியத்துவத்தை உணரலாம். வள்ளுவர் கல்விக்குச் சிறப்பிடம் கொடுத்து,

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”[1]

என்று குறிப்பிடுகிறார். கற்ற கல்வியை அனைவருக்கும் போதிக்க வலியுறுத்துகிறார். ஒருவர் கற்கத் தகுந்த நூல்களைக் கசடறக்கற்று, கற்ற

கல்விக்குத் தக்க நெறியில் நிற்க வேண்டும் என்பதை அறியமுடிகின்றது.மக்கள் நூல்களைப் பயிலும் அளவிற்கேற்பவே அவர்களுடைய அறிவு நுட்பமும், பெருக்கமும் அடைகின்றது என்பதை,

> "தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத்து ஊறும் அறிவு" [2]

என தெய்வப்புலவர் மணற்கேணியுடன் ஒப்பிட்டு அழகாக மொழிந்து சென்றுள்ளார். மணலுள் இனிமையும் தூய்மையும் மிகுந்த நீர் கிடக்கின்றதைப் போன்றே மனிதனின் மனத்துள்ளும் தூய இனிய அறிவு பொதிந்து கிடக்கின்றது. கேணியைத் தோண்டத்தோண்ட அந்நீர் வெளிப்படுவதைப் போன்று நூல்களைப் பயிலப்பயில அவ்வறிவு வெளிப்படுகின்றது. கிணறு எவ்வளவு ஆழமாகச் செல்கிறதோ அந்த அளவுக்கு நீர் மிகுதியாக வெளிப்படும். அதைப் போன்று மனம் எந்த அளவுக்கு விரிவடைகின்றதோ அந்த அளவுக்கு அறிவும் வெளிப்படும் என்பதை உணரமுடிகின்றது.கல்வியே, எல்லா வாழ்க்கை இன்னல்களுக்கும் காரணமான அறியாமையாகிய மயக்கத்தைத் தீர்க்கும் என்பதை,

> "இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
> தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
> எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
> மம்மர் அறுக்கும் மருந்து" [3]

எனும் நாலடியார் பாடல் விளக்குகின்றது. கல்வி நல்வாழ்க்கையாகிய இம்மைப்பயனை விளைவிக்கும், பிறருக்குக் கற்பித்தலால் குறைவுபடுதல் இல்லை, கல்வி கற்றவர்களை அறிவாலும், புகழாலும் உயரச்செய்யும், கல்வி போல் அறியாமை மயக்கத்தைத் தீர்க்கும் மருந்து வேறு எதுவும் இல்லை என்பதை

அறியமுடிகிறது. கல்வி கற்றவர் கீழ்க்குடியில் பிறந்தாலும் அவரை உயர்வான இடத்தில் வைத்து மதித்து எண்ணப்படுவர். இதனை,

“களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்” [4]

என்ற நாலடியார் பாடலின் மூலம் உணரமுடிகின்றது. சான்றோர், உப்பை நெல்லைவிட மிகவும் பயன்உடையதாகப் பயன்படுத்துவர். அதுபோலவே கல்வியில் சிறந்தவர்களும் போற்றப்படுவர். கல்வி, மாந்தரை உயர்வகுப்பாரினும் மேலவராக மதிக்க வைக்கும் என்பதை எடுத்துரைக்கின்றது. கற்றறிந்தவர்கள் சில கடமைகளைச் செய்ய வேண்டும். இதனை,

“நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலும் நூற்கேலா
வெண்மொழி வேண்டினும் சொல்லாமை – நன்மொழியைச்
சிற்றினம் அல்லார்கண் சொல்லலும் இம்மூன்றும்
கற்றறிந்தார் பூண்ட கடன்”[5]

திரிகடுகம் வலியுறுத்துகின்றது. தன்னை நாடி வருகின்றவர்களுக்கு நூல்களின் கருத்துக்களைத் தெளிவாக விளக்கிக் கூறுவது கல்வி கற்றவர்களின் கடமைகளாகும் என்று நல்லாதனார் குறிப்பிடுகின்றார். சிறுபஞ்சமூலம் கல்விகற்றவர்களை தேவர்களுக்கு ஒப்பாகக் கூறுகிறது. இதனை,

“தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்கால்
பூதரே முன்பொருள் செய்யாதார் - ஆதரே
துன்ப மிலேம் பண்டு யாமே வனப்புடையேம்

என்பார் இருகால் எருது" [6]

எனக் காரியாசான் உணர்த்துகின்றார். கல்வி கற்பதால் சிறப்படைய முடியும். அப்படிக் கல்வி கற்காவிட்டால் சிறப்படைய முடியாது. நூல்களைக் கற்றவர்கள் தேவர்களுக்கும், நூல்களைக் கற்காதவர்கள் பூதபிசாசுகளுக்கும் ஒப்புமைப்படுத்திக் கூறுகின்றார். அறிவு நுட்பத்தைவிட கற்றபொருளை மறவாதிருத்தல் மேலானது என்பதனை,

"மேதையில் சிறந்தன்று கற்றது மறவாமை" [7]

என்றும்,

"குலனுடை மையில் கற்புச் சிறந்தன்று"[8]

என்றும் முதுமொழிக்காஞ்சிப்பாடல் விளக்குகின்றது. உயர்ந்த குடியில் பிறப்பதைவிட கல்வி கற்பதனால் உயர்வு அடைய முடியும் என்பதை அறியமுடிகின்றது. இதே போன்று,

"கற்றது உடைமை காட்சியின் அறிப" [9]

என்று கல்வியின் சிறப்பை முதுமொழிக்காஞ்சி எடுத்துரைக்கின்றது. கற்ற கல்வியின் சிறப்பை அறிவினால் அளந்தறிய முடியும் என உணர்த்துகின்றது. கற்றவர்களின் அறிவினை அவரினும் கற்றவர்களால் மட்டுமே அறிந்துகொள்ள முடியும் என்பதை,

"நல்லார் நலத்தை உணரின் அவரினும்
நல்லார் உணர்ப பிறருணரார் - நல்ல
மயிலாடு மாமலை வெற்பமற்று என்றும்
அயிலாலே போழ்ப அயில்" [10]

என முன்றுறையரையனார் விளக்குகின்றார். இதே போன்று,

"புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம் - நலமிக்க
பூம்புனல் ஊர பொதுமக்கட்கு ஆகாதே
பாம்பறியும் பாம்பின கால்" [11]

என்று பழமொழிநானூறுப் பாடல் வழி உணர்த்துகின்றார். பாம்பினுடைய கால்களைத் தமக்கு இனமாகிய பாம்புகளே அறியும் தன்மையுடையன. அதுபோல கற்றோர் பெருமையைக் கற்றோரால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும். கல்வியில் சிறந்தவர்கள் தங்களைப் பற்றித் தாங்களே புகழ்ந்து பேசமாட்டார்கள். இதனை,

"கற்று அறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பார் - தெற்ற
அறைகல் அருவி அணிமலை நாட
நிறைகுடம் நீர்தளும்பல் இல்" [12]

என்று முன்றுறையரையனார் குறிப்பிடுகின்றார். நிறைந்த குடம் ஆரவாரித்து அலைதல் இல்லை. அதுபோன்று கற்றவர்கள் தங்களைப் பற்றி பேசமாட்டார்கள் என உணர்த்துகின்றார். கல்வியில் சிறந்த சான்றோர் இல்லாத அவை பாழாவது போல் கல்வி கற்காதவனுடைய உடலானது வெறும் புலால் உடம்பாகும் என்பதனை விளம்பிநாகனார்,

"அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா உடம்பு" [13]

என எடுத்துரைக்கின்றார். மனிதன் சிறப்படைய வேண்டுமென்றால் கல்வி கற்க வேண்டும் என வலியுறுத்துகின்றார். கல்வி முதலான கலைகளை விரும்பிக் கற்றுக்கொள்வது நன்மையாகும் என்பதனை ஔவையார்,

"வித்தை விரும்பு" [14]

"கேள்வி முயல்" [15]

எனும் ஆத்திசூடிப் பாடல் மூலம் விளக்குகின்றார். அறிஞர் சொற்களை ஆர்வத்தோடு கேட்டு அறிவைப் பெறவேண்டும். அது கல்வி கற்றவர்களுக்குச் சிறப்பைத்தரும். கற்றறிந்தவர்கள் சொல்லும் நூலின் பொருளைக் கேட்டு கல்வியாகிய நற்பொருளை விரும்ப வேண்டும் என்பதனை அறியமுடிகின்றது. கையிலுள்ள நிலையற்றப் பொருளைக் காட்டிலும் கல்வியே நிலையான பயன் தரத்தக்க செல்வமாகும். இதனை,

"கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி" [16]

என ஔவையார் எடுத்துரைக்கின்றார். அழியக்கூடிய செல்வத்தைவிட அழியாத கல்வியே உண்மையான செல்வமாகும். கல்வியே உண்மைப் பொருளாகும் என்று உணர்த்துகின்றார். கல்வி கற்காதவர்களுக்கு அறிவும், நன்னடத்தையும் இல்லை என்பதனை ஔவையார்,

"ஓதாதவர்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்" [17]

என்று கொன்றைவேந்தன் பாடலில் உணர்த்துகின்றார். கல்வியே அறிவுக்கும், ஒழுக்கத்திற்கும் சிறந்த பொருள் என்பதை அறியமுடிகிறது.அதிவீரராமபாண்டியன் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து,

"எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்" [18]

"அறிஞர்க்கு அழகு கற்று உணர்ந்து அடங்கல்" [19]

"கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே" [20]

"நாற்பால் குலத்தின் மேற்பால் ஒருவன்

கற்றிலன் ஆயின் கீழ் இருப்பவனே" [21]

"எக்குடி பிறப்பினும் யாவரே ஆயினும்

அக்குடியிற் கற்றோரை மேல் வருக என்பர்" [22]

என வெற்றிவேற்கையில் உணர்த்துகின்றார். கல்வி கற்றுக் கொடுக்கின்றவர் கடவுளுக்குச் சமமானவர் ஆவார். அக்கல்வியைப் பெற்றவர்கள் அடங்கி இருத்தல் வேண்டும். பிறவிதோறும் வந்து பெருந்துணையாக நிற்கும் கல்வியை இரந்தாயினும் கற்றுத்தேறுதல் மனிதனின் தலையாயக் கடமை ஆகும். உயர்ந்த குலத்தில் பிறந்தவனாக இருந்தாலும் அவன் கல்வி கற்காதவனாயின் தாழ்ந்தவனே ஆவான். அதனால் எந்தக் குலத்தில் பிறந்தவராயினும் யாராக இருந்தாலும் கல்வி கற்றவர்களைச் சிறப்பு செய்வார்கள் என்று விளக்குகின்றார். கற்றிருந்தால் மட்டுமே சிறப்படைய முடியும் என்பதை உணரமுடிகிறது. ஒருவன் கல்வி கற்றவனைப்போல் பாவனை செய்யக்கூடாது என்பதை,

"கான மயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி

தானும் அதுவாகப் பாவித்துத் - தானும் தன்

பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே

கல்லாதான் கற்ற கவி" [23]

எனும் மூதுரைப் பாடலில் ஔவையார் எடுத்துரைக்கின்றார். கல்வி கற்காதவன் கற்றவனைப்போல் நடித்தாலும் அவன் கல்வி கற்காதவனாகவே கருதப்படுவான் என்று கூறுகின்றார். கற்றவர்களுக்கு மயிலையும், கற்காதவர்களுக்கு வான்கோழியையும் ஒப்பிட்டுக் காட்டுகின்றார். உலகநாதர் கல்வி கற்காமல் ஒருநாளும் இருக்கக்கூடாது என்கிறார். இதனை,

"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" [24]

என உரைக்கின்றார். கல்விச் செல்வமே உயர்ந்த செல்வம் என்பதை உணர்ந்த உலகநாதர் தாம் படைத்த உலகநீதி எனும் நூலில் கல்வியின் சிறப்பை வெளிப்படுத்துகிறார்.கற்றவன் எப்பொழுதும் கல்விச் செருக்குக் கொள்ளக்கூடாது. இதனை,

"கடலே அணையம் யாம் கல்வியால் என்னும்
அடலேறு அனைய செருக்கு ஆழ்த்தி விடலே
முனிக்கரசு கையால் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப்படும்" [25]

என்றும்,

"பொன் அணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத் தாம்மற்று ஒவ்வார் மின்னுமணி
பூணும் பிற உறுப்புப் பொன்னே அது புனையாக்
காணும் கண் ஒக்குமோ காண்" [26]

என்றும் சிவப்பிரகாசசுவாமிகள் நன்னெறிப் பாடல் வழி உணர்த்துகின்றார். கல்வி என்பது கடலைப் போன்று பெரியது. அதனை முழுவதும் அறிந்துவிட்டோம் என்று

செருக்குக் கொள்ளக்கூடாது. அரசர்களும் கற்றறிந்த புலவர்களுக்கு ஒப்பாகமாட்டார்கள் என்று நவில்கின்றார். கல்வி கற்றவர்களுக்கு என்றுத் தனிச் சிறப்பு உண்டு என்பதை அறியமுடிகின்றது. கற்றவர்களின் பெருமையை கற்றவர்களாலேயே அறிந்து கொள்ளமுடியும் என்பதை,

"கற்றோர் கனமறிவர் கற்றோரே கற்றறியா
மற்றோ ரறியார்" [27]

என்று நீதி வெண்பாவும்,

"கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்" [28]

என்று நன்னெறியும் உணர்த்துகின்றது. கல்வி கற்றவர்களை மேன்மக்கள் விரும்புவார்கள். அவர்களது பெருமையை கல்வி கற்றவர்களால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும் என்கிறது. முனைப்பாடியார் கல்வியின் பெருமை குறித்து,

"தேசுந் திறனறிந்த திட்பமும் தேர்ந்துணர்ந்து
மாசு மனத்தகத் தில்லாமை – ஆசின்றிக்
கற்றல் கடனறிதல் கற்றா ரினத்தராய்
நிற்றல் வரைத்தே நெறி" [29]
"எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை – அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின்" [30]
"கற்றதுவுங் கற்றொருபால் நிற்பக் கடைப்பிடியும்
மற்றொருபால் போக மறித்திட்டுத் - தெற்றென

நெஞ்சத்துட் டீமை யெழுதருமேல் இன்னாதே

கஞ்சத்துட் கற்பட்டாற் போன்று" [31]

எனக் குறிப்பிடுகின்றார். குற்றமில்லாமல் கல்விகற்றல், கற்ற நூல்களை ஆராய்தல், கற்றவருடன் நட்பு கொண்டு இருத்தல் முதலானவை கற்றவர்களுக்கு உரிய இயல்புகளாகும். மக்கட் பிறப்பைப் போன்று சிறந்த பிறப்பு வேறில்லை. அப்படிப்பட்ட மக்கள் பிறப்பில் கல்வி கற்று, கற்றபடி நிற்க வேண்டும். கற்றபடி ஒழுகாதவன் தாமரைப்பூ கல்பட்டு சிதைவது போல் துன்பத்தால் சிதைந்து அல்லல்படுவான் என்றும் கூறுகின்றார். நீதிநெறிவிளக்கம் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பதை,

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்

புறங்கடை நல்லிசையும் நாட்டும் - உறுங்கவலொன்

றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியின் ஊங்கில்லை

சிற்றுயிர்க் குற்ற துணை" [32]

எனும் பாடல்வழி அறியலாம். கல்வியானது ஒருவனுடைய வாழ்வின் எல்லைவரை வந்து உதவும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றைத் தரும். கல்வி என்றுமே துணையாக நிற்கும் என்பதை எடுத்துரைக்கின்றது. கல்வி கற்றவன் வறுமையாளனாக இருப்பின் அவன்கற்ற கல்வியால் பயன் எதுவும் இல்லை என்பதை,

"எனைத்துணைய வேனும் இலம்பாட்டார் கல்வி

தினைத்துணையுஞ் சீர்ப்பா டிலவாம் - மனைத்தக்காள்

மாண்பில ளாயின் மணமகன் நல்லறம்

பூண்ட புலப்படா போல்" [33]

என்று குமரகுருபரர் சுட்டுகின்றார். கல்விக்கு பகை வறுமை என்பது குமரகுருபரர் கண்ட உண்மையாகும். சிலநாளே வாழ்ந்து மடியும் இந்த நிலையற்ற உடம்பினால் எந்தப் பயனும் இல்லை. கல்வி கற்று வாழ்வதே உயர்ந்த வாழ்வு என்று குமரகுருபரர் உணர்த்துவதை அறியமுடிகிறது. கல்வியின் எல்லை கண்டவர் யாரும் இல்லை. இதனை,

"முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉங்
கற்றனம் என்று களியற்க – சிற்றுளியால்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால்" [34]

என்று நீதிநெறிவிளக்கம் உணர்த்துகின்றது. அனைத்தும் கற்றவர் போல் ஒருவன் செருக்குக் கொள்ளக்கூடாது என்கிறது. விவேகசிந்தாமணி கல்வியின் சிறப்பை,

"தண்டா மரையி னுடம்பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டுகம்
வண்டோ கானத் திடையிருந்து வந்து
கமல மதுவுண்ணும்
பண்டே பழகி யிருந்தாலும் அறியார்
புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்
கலப்பர் கற்றோரே" [35]

என விளக்குகின்றது. கல்வி கற்றோர் தம்மை போல் கல்வி கற்று அறிவில் சிறந்தவர்களைக் கண்டு மகிழ்ச்சி கொள்வர் என்று கூறுகின்றது. உயிருக்கு

உற்றதுணையாகிப் பிறவிதோறும் பின்தொடரும் அக்கல்வியைக் கற்கவேண்டிய முறையினைப் பெருநிலமன்னவனான பாண்டியன் நெடுஞ்செழியன்,

"உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போர் அன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும்மனம் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னா தவருள்
அறிவுடை யோனாறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே" [36]

என்று புறநானூறுப் பாடல் வழி விளக்குகின்றார். ஆசிரியருக்கு அரிய பொருள்களை வாரிக் கொடுத்தோ, உரிய ஏவல்களைச் செய்தோ, இணைந்த அன்புடனே பொருந்திக் கல்வியைக் கற்றுக்கொள்வது சிறப்புடையது என்று உரைக்கின்றார். இதே போன்று வள்ளுவரும்,

"மேல்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு" [37]

எனும் குறள்வழி உணர்த்துகின்றார். கல்லாதவர் உயர்ந்தகுடியில் பிறந்தவராக இருப்பினும் தாழ்ந்தகுடியில் பிறந்திருந்தும் கல்வி கற்றவரைப் போன்ற பெருமை இல்லாதவரே என்று கூறுகின்றார். ஒரே குடியில் பிறந்தாலும் கல்வி கற்றவனையே அனைவரும் விரும்பி வரவேற்பார்கள். எக்குலத்தில் பிறந்தாலும் கல்வி கற்றவனே

சிறப்புக்கு உரியவன் எனும் நிலைபற்றி அறியமுடிகிறது. இக்கருத்தைப் போன்றே நாலடியாரும்,

"தோணி யியக்குவான் தொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டான் என்றிகழார் - காணாய்
அவன்துணையா ஆறுபோ யற்றேநூல் கற்ற
மகன்துணையா நல்ல கொளல்" [38]

என்றப் பாடல் வழி உரைக்கின்றது. கல்விக்கு முன் பிறப்பின் உயர்வு தாழ்வு கருதத்தக்கன அல்ல என்று விளக்குகின்றது. தந்தையின் கடமையாக புறநானூறு,

"சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே" [39]

என்றப் பாடலின் மூலம் விளக்குகின்றது. மகனை கல்வி கேள்விகளில் சிறந்த சான்றோனாக்குதல் தந்தையின் கடமை என்று கூறுகின்றது. கல்வி கற்றுத்தருவது தந்தையின் கடமைகளில் ஒன்றாகக் கூறுவதன் மூலம் கல்வியின் முக்கியதுவத்தை உணரலாம். இதே போன்று வள்ளுவர்,

"தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்" [40]

என்றும்,

"ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" [41]

என்றும் குறள்வழி உணர்த்துகின்றார். தந்தை தன் மகனுக்குச் செய்யத்தக்க நல்ல உதவி கற்றவர் கூட்டத்தில் தன் மகன் கல்வியில் மேம்படச் செய்தலாகும். அக்கல்வியில் சிறந்த தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் எனப் பிறர் சொல்லக்

கேள்வியுற்ற தாய், தான் அவனைப் பெற்ற காலத்து உற்ற மகிழ்ச்சியைவிடப் பெரிதும் மகிழ்வாள். அதனால் தாய், தந்தை இருவருக்கும் மகன் செய்யத் தக்க கைம்மாறு இவன் தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தானோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும் என்பதனை வள்ளுவர்,

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்" [42]

எனும் குறள் மூலம் விளக்குகின்றார். கல்வியினால் தாய், தந்தை, மகன் என அனைவரும் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதை அறியமுடிகிறது. இக்கருத்தைப் போன்றே கம்பராமாயணத்தில்,

"மற்ற வன்சொன்ன வாசகம் கேட்டலும் மகனைப்
பெற்ற அன்றினும் பிஞ்ஞகன் பிடித்தஅப் பெருவில்
இற்ற அன்றினும் எறிமழு வாளவன் இழுக்கம்
உற்ற அன்றினும் பெரியதோர் உவகையன் ஆனான்" [43]

என்று கம்பர் கல்வியின் சிறப்பை உணர்த்துகின்றார். எல்லாச் சிறப்புகளைவிட கல்வியினால் பெற்ற சிறப்பு மகிழ்ச்சியைத் தரும். மகனைச் சான்றோன் என்று பலர் புகழ்வதைக் கேட்டலே தந்தைக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடியது என்பதை அறியமுடிகின்றது. மக்களுக்கு இருக்க வேண்டிய இன்றியமையாதது கல்வி எனத் தமிழ் முன்னோர்கள் கண்டு கூறியுள்ள கல்விக் கொள்கையை,

"புலன்கொளுவ மனம் முகிழ்த்த
சுருள் நீக்கி மலர்விக்கும்
கலைபயிலத் தொடங்குவித்தார்" [44]

எனச் சேக்கிழார் பெரியபுராணத்தில் எடுத்துரைக்கின்றார். கற்றவரைப் போலவே நூற்கருத்துக்களைக் கேட்பவரும் சிறந்தோராவர் என்பதனை திவாகர முனிவர்,

"கேள்வியும் கல்வி யாகும்" [45]

என்று திவாகர நிகண்டில் குறிப்பிடுகிறார். சொற்பொழிவுகளைக் கேட்பதன் வாயிலாகவும் கல்வியறிவினைப் பெறமுடியும். இதே போன்று,

"கற்றலிற் கேட்டலே நன்று" [46]

என்னும் பழமொழிப் பாடல் உணர்த்துகின்றது. கற்க முடியாவிடினும் கேட்டலையாவது ஒவ்வருவரும் கட்டாயமாகச் செய்தே தீரவேண்டும் என்கிறது. இக்கருத்தைப் போன்றே வள்ளுவரும்,

"கற்றிலன் ஆயினும் கேட்க அ∴தொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை" [47]
"இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்" [48]
"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்" [49]

என்று செல்வத்துள் செல்வமாகிய செவிச் செல்வத்தின் இன்றியமையாமையை எடுத்தியம்புகின்றார். நூல்களைக் கற்கவில்லையாயினும் கற்றறிந்தவரிடம் கேட்டறியவேண்டும். அது ஒருவனுக்கு வாழ்க்கையில் தளர்ச்சி வந்தபோது ஊன்றுகோல் போல் துணையாகும் என்கிறார். இதே போன்று நாலடியாரில்,

"கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளுந் தலைப்படுவர்" [50]

எனும் பாடல் உணர்த்துகின்றது. கேள்வியும் கல்வி போலவே தளர்ச்சியில் ஊன்று கோலாய் வந்துதவும். சிறிதளவு கேட்பினும் அதற்குத் தக்க பயன் கிடைத்தே தீரும் என்று அறிவுறுத்துகின்றது. கல்வியைக் கற்கக் கற்கத்தான் அறிவு மேலும் மேலும் வளரும். ஓவியம் கையால் பழகப் பழக அழகு பெறுவது போலவே கல்வியும் நாக்கால் பேசப் பேசவும், மனத்தால் ஆராய ஆராயவுந்தான் அழகு பெறும் என்பதனை ஔவையார்,

> "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
> வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் - நித்தம்
> நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
> கொடையும் பிறவிக் குணம்" [51]

என்று தனிப்பாடல் திரட்டில் உரைக்கின்றார். எப்பொழுதும் படித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்கிறார். எவ்வளவு கற்றிருப்பினும் அதனை ஒரு கைப்பிடி மண்ணின் அளவாகவே கருத வேண்டும் என்பதை,

> "கற்றதுகைம் மண்ணளவு கல்லாதது உலகளவு என்று
> உற்றகலை மடந்தை ஓதுகிறாள் - மெத்த
> வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
> எறும்பும் தன்கையால் எண்சாண்" [52]

என ஔவையார் எடுத்துரைக்கின்றார். கல்லாதவற்றை உலகத்தின் அளவாகக் கருதி அடக்கமுறல் வேண்டும். கல்விக்கு அரசியாகிய கலைமகளே இன்னும் படித்துக்கொண்டிருக்கிறாள். அதனால் அனைத்தையும் படித்துவிட்டோம் என்று செருக்கு கொள்ளக்கூடாது என்கிறார்.கல்விக்கு வயது வேற்றுமை இல்லை. கற்றவர் எவ்வளவு சிறியவராய் இருப்பினும் எவ்வளவு பெரிய செயல்களையும் செய்து முடிக்கும் ஆற்றல் உடையவர்கள் ஆவார்கள். பெரிய தேரைச்

செலுத்துவது சிறிய அச்சாணியாகும். மடலால் பெரிய தாழம்பூவைக் காட்டிலும், மடலால் சிறிய மகிழம்பூ மிகுந்த மணத்தைக் கொடுக்கும். உருவத்தால் பெரிய கடல்குளிக்கவும் உதவுவது இல்லை. சிறிய ஊற்றுநீரே குடிக்கவும் உதவுகின்றது. அதுபோல உடலாலும், வயதாலும் சிறியவர் என்று இகழ்ந்துவிடக் கூடாது. அவர்தம் கல்விப் பெருமையினையே நோக்க வேண்டும். இதனை,

> "மடல்பெரிது தாழை மகிழ் இனிது கந்தம்
> உடல் சிறியர் என்று இருக்க வேண்டா – கடல்பெரிது
> மண்ணீரும் ஆகாது அதன் அருகே சிற்றூறல்
> . உண்ணீரும் ஆகி விடும்" [53]

என்னும் மூதுரைப் பாடலும்,

> "உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
> அச்சுஆணி அன்னார் உடைத்து" [54]

என்னும் குறளும் அறிவுறுத்துகின்றன.எனவே இப்பெருஞ்சிறப்பைத் தரும் கல்வியை அனைவரும் கற்க வேண்டும்.கல்வி கற்றவர்களுக்கு கல்வியினால் பெருஞ்சிறப்பு கிடைக்கும் என்பதை அறியமுடிகின்றது.

## இளமைப் பருவம்

கல்வி வேரூன்றிப் பதிதற்குரிய பருவம் இளமைப் பருவம்தான் இளமைப்பருவம் கடந்துவிட்டால் கல்வியில் ஆர்வம் உண்டாகாது. இளமைப் பருவத்தில்தான் அறிவு நூற்கல்வியைப் பயிலுதல் வேண்டும். கல்விக்கு ஏற்றப் பருவம் இளமைப்பருவம். கல்விப் பயிலும் எதையும் ஆற்றக்கூடிய இளமைப்

பருவத்திலேயே கற்கப்பட்டு வேரூன்றினால்தான் மேலும் மேலும் வளர்ச்சி எய்திப் பயனளிக்கும். இளமைப்பருவத்திலேயே கல்வி கற்பது பற்றி,

“கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல – தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து” [55]

எனும் நாலடியார் பாடல் உணர்த்துகின்றது. தண்ணீரை விட்டு பாலை அருந்தும் அன்னப் பறவையைப் போல் நல்ல கருத்துக்களைக் கொண்ட நூல்களைக் கற்க வேண்டும் என்கிறது. கல்வி கற்பவரின் வாழ்நாள் சிலவே ஆகும். அதனால் இளமைப் பருவத்திலேயே கல்வி கற்க வேண்டும் என்று எடுத்துரைக்கின்றது.கற்றற்குரிய இளமைப்பருவங்கழிவதற்கு முன்னே கல்வி கற்கவேண்டும் என்பதனை முன்றுறையரையனார்,

“ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்றும் எனவும் புணருமோ - ஆற்றச்
சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லையே இல்லை
மரம்போக்கிக் கூலிகொண் டார்” [56]

என்று பழமொழிநானூறுப் பாடல் மூலம் விளக்குகின்றார். வழியில் செல்லும் வண்டிக்கு வரி வாங்குபவர் குறிப்பிட்ட இடத்தைக் கடந்த பிறகு வரி வாங்குவது அரிது. தோணிக்காரனும் மக்களை ஆற்றைக் கடந்து அக்கரைக்குக் கொண்டுபோய் விட்ட பின்பு கூலி வாங்குவதென்பது அவ்வளவு எளிதன்று அதனால் வாங்க வேண்டிய இடத்திலேயே வாங்கிவிட வேண்டும். அதுபோலவே கல்வியினையும், நீண்ட நாளைக்கு நிலைத்து நிற்காத இளமைப் பருவம்

உள்ளபோதே கற்க வேண்டும். கற்பதற்குரிய சிறப்புப் பருவமாகிய இளமைப் பருவத்தில் செய்ய வேண்டிய வேலையும் கல்விகற்பதுதான் என்கிறார். இளமைப் பருவத்தில் கல்வி கற்க வேண்டும். இதனை,

> "முந்தை எழுத்தின் வரவுணர்ந்து பிற்பாடு
> தந்தையும் தாயும் வழிபட்டு – வந்த
> ஒழுக்கம் பெருநெறி சேர்தல்இம் மூன்றும்
> விழுப்ப நெறிதூரா வாறு" [57]

என்று நல்லாதனார் திரிகடுகத்தில் விளக்குகின்றார். இளமைப் பருவத்தில் கல்வியறிவு பெறுதலும், அதன் பின்பு பெற்றோரை வழிபடுகின்ற ஒழுக்க நெறியைச் சேர்தலும், சான்றோர்கள் வழியைப் பின்பற்றலும் ஆகிய இம்மூன்றும் உயர்வினைத் தரும் என்று எடுத்துரைக்கின்றார். இளமையில் கல்வி கற்காதவனின் நிலையை காரியாசான்,

> "பொன்பெறுங் கற்றான் பொருள்பெறு நற்கவி
> என்பெறும் வாதி இசைபெறும் - முன்பெறக்
> கல்லார்கற் றாரினத்தர் அல்லார் பெறுபவே
> நல்லார் இனத்து நகை" [58]

எனக் குறிப்பிடுகின்றார். இளமைப்பருவத்தில் கல்வி கற்காதவனை சான்றோர் இகழ்ந்து உரைப்பார்கள். கற்றுவல்லவன் பொன்னைப்பெறுவான், சிறந்த கவிபாடவல்லவன் அரசரால் எல்லாப் பொருளையும் பெறுவான், வாதம் செய்து வெல்ல வல்லவன் புகழினைப் பெறுவான். இத்தகைய உயர்ந்த கல்வியை இளமையிலேயே கற்க வேண்டும் என்கிறார். இக்கருத்தைப் போன்றே நான்மணிக்கடிகையில்

"இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்" [59]

எனும் பாடல் விளக்குகின்றது. இளமைப் பருவத்திலேயே கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டும். கல்வி கற்காமல் இருப்பது குற்றமாகும் என்று விளம்பிநாகனார் எடுத்துரைக்கின்றார். கல்வியைக் கற்பதற்கு இளமைப் பருவமே சிறந்தது என்பதனை ஔவையார்,

"பருவத்தே பயிர்செய்" [60]

"இளமையில் கல்" [61]

எனும் ஆத்திசூடிப் பாடல்கள் மூலம் உணர்த்துகின்றார். தகுந்த காலத்தில் பயிர் செய்வது போல் தகுந்த இளமைப் பருவத்திலேயே கல்வி கற்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். இளமையிலேயே கல்வி கற்றுக் கொண்டால் பெருமை அடையலாம். இதனை,

"வருத்தவளை வேயரசர் மாமுடியின் மெலாம்
வருத்த வளையாத மூங்கில் - தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான்" [62]

எனும் நீதிவெண்பாப் பாடல் விளக்குகின்றது. இளமையில் கல்வி கற்றுக்கொள்ளாவிட்டால் சிறுமை அடைவர். அதனால் இளமைப் பருவம் உள்ளபோதே கல்வி கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை அறியமுடிகின்றது. இளமைப் பருவம் நிலையில்லாதது. அதனை அறிந்து நற்செயல்களைச் செய்ய வேண்டும். கல்வி என்பது இளமைப் பருவத்தில் கற்க வேண்டியதாகும். இளமையிலேயே கல்வி கற்கவில்லை என்றால் முதுமையில் கல்வி கற்க

முடியாது. இளமைப்பருவம் கள்ளமற்றது, கவலையில்லாதது அதனால் கற்றற்குரிய சிறப்புப் பருவமாகிய இளமைப் பருவத்திலேயே கல்வியைக் கற்க வேண்டும். இளமையில் கல்வியைக் கற்றுக் கொண்டால் அது மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்துகொள்ளும். இளமையில் கற்ற கல்வியே என்றும் மறவாமல் நிலைத்து நிற்கும். இளைஞர்கள் தம் இளமைப்பருவத்தில் செய்ய வேண்டிய வேலையும் அதுதான் என்பதை அறியமுடிகின்றது.

**கண்ணும் புண்ணும்**

கல்வி கற்றவர்களையே கண் உடையவராகக் கருத வேண்டும். கல்வி கல்லாதவரைக் குருடராகவும் அவர் கண்களைப் புண்களாகவும் கருத வேண்டும் என்பதனை வள்ளுவர்,

“எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு” [63]
“கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு
புண்உடையர் கல்லா தவர்” [64]

எனக் கூறுகின்றார். எண், எழுத்து எனும் இரண்டும் கண்கள் எனவும், கல்வி கற்றவரே கண்ணுடையவர், கல்வி கற்காதவர் முகத்தில் இரண்டு புண் உடையவர் என அறிவுறுத்துகின்றார். அரசன் கல்வியில் சிறந்த அமைச்சர்களை தனது கண்களாக எண்ண வேண்டும். இதனை,

“கற்றார் பலரைத்தன் கண்ணாக இல்லாதான்
உற்றுஇடர்ப் பட்ட பொழுதின்கண் தேற்றம்
மரையா துணைபயிரும் மாமலை நாட
சுரையாழ் நரம்பறுத் தற்று” [65]

எனும் பழமொழிநானூறுப் பாடல் உணர்த்துகின்றது. கல்வியில் சிறந்த சான்றோர்கள் இல்லாத அரசன் எடுக்கின்ற முடிவானது பயனில்லாமல் போகும் என்று முன்றுறையரையனார் எடுத்துரைக்கின்றார். இக்கருத்தை முன்னமே ஔவையாரும் கூறியிருக்கின்றார்.

"எண் எழுத்து இகழேல்" [66]

எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்" [67]

நீதிவெண்பா கல்வி கற்றவர்களுக்கு மூன்று கண்கள் உள்ளன என்பதை,

"கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு மூன்றுவிழி
எண்ணும்விழி யேழாகு மீவோர்க்கு – நண்ணும்
அநந்தந் தவத்தா லருள்ஞானம் பெற்றோர்க்
கநந்தம் விழியென் றறி" [68]

உரைக்கின்றது. கல்வி கற்பதனால் அறிவு வளர்கின்றது. அந்த அறிவே மூன்றாவது கண் என உணர்த்துகின்றது. கல்வி கற்றவர்களுக்கு இருப்பதே உண்மையான கண்கள். கல்வி கற்காதவர்களுக்கு இருக்கின்ற கண்கள் புண்களாகும் என்பதை அறியமுடிகின்றது. இக்கருத்தைப் போன்றேத் திருமூலர்,

"கற்றறி வாளர் கருதிய காலத்துக்
கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறி வாளர் கருதி உரைசெய்யுங்
கற்றறி காட்டக் கயலுள வாக்குமே" [69]

என்று திருமந்திரப்பாடல் மூலம் விளக்குகின்றார். கல்வி கற்றவர்களுக்கு அகக்கண் எனும் மூன்றாவது கண் தோன்றும் என விளக்குகின்றார்.

## அழகும் அணிகலமும்

மனிதர்களுக்குத் தலைமயிர் அழகும், மார்பழகும், பல்லழகும், ஆடையழகும், அணியழகும், பூசிக் கொள்ளும் பூச்சழகும் அழகுகள் ஆகாது. நூலில் கற்ற கல்வி அழகே அழகாகும். அவர்களுக்கு வேறு அணிகலங்கள் தேவை இல்லை என்பதை,

“குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு” [70]

எனும் நாலடியார் பாடல்வழி அறியமுடிகிறது. ஒழுக்கத்தை அளிக்கின்ற கல்வியே மக்களுக்கு அழகாகும் என நாலடியார் நவில்கின்றது. சிறுபஞ்சமூலம் கல்வியின் அழகுகளாக,

“மயிர் வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர் வனப்பும் காதின் வனப்பும் - செயிர்தீர்ந்த
பல்லின்வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு” [71]

என்று உரைக்கின்றது. நூல்களுக்குப் பொருந்திய சொல்வன்மையினால் வரும் அழகே சிறந்த அழகாகும். அணிகலங்களின் அழகைவிட கல்வியினால் வருகின்ற அழகே சிறப்பானது என்று காரியாசான் எடுத்துரைக்கின்றார். இக்கருத்தைப் போன்றே ஏலாதியும்,

“இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடில் வனப்பும்
நடைவனப்பும் நாணில் வனப்பும் - புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோடு
எழுத்தின் வனப்பே வனப்பு” [72]

என விளக்குகின்றது. மக்களின் அழகும், செல்வத்தின் அழகும் அழகுகள் ஆகாது. இலக்கணத்தோடு கூடிய இலக்கியக் கல்வியழகே உண்மையான அழகாகும் என்று கணிமேதாவியார் விளக்குகின்றார். இதே போன்று நீதிநெறி விளக்கத்திலும்,

“கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம் - முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார்” [73]

எனும் பாடல் வழி நன்குணரலாம். செல்வ வாழ்க்கையிலும் கல்வி வாழ்க்கையே சிறந்தது. படித்தவர்களுக்கு அப்படிப்பின் அழகே அழகாகும். அதனால் அவருக்கு வேறு நகையழகு வேண்டியது இல்லை என்பதை அறிய முடிகின்றது. ஏனைய அழகுகள் மட்டும் இருந்தால் போதாது அவற்றோடு கல்வியழகும் இருக்க வேண்டும் என்பதனை வள்ளுவர்,

“கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்
கொள்ளார் அறிவுஉடை யார்” [74]
“கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்” [75]
“ உள்ஏன்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்

களர்அனையர் கல்லா தவர்" [76]

" நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்

மண்மாண் புனைபாவை யற்று" [77]

எனக் குறிப்பிடுகின்றார். கல்லாதோர் அறிவுடையவர் போல் நடித்தாலும் அவர்களைக் கற்றவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். கல்லாதவருடைய பொய்யான ஆரவாரங்கள் எல்லாம் கற்றவரோடு சிறிது நேரம் உரையாடிப் பார்த்ததுமே பறந்தோடிவிடும். மண்ணுக்குச் சுமையாக அவர்களும் உள்ளார்கள் என்ற அளவே தவிர களர்நிலம் போல அவர்களால் பயனொன்றும் இல்லை. அவர்களின் அழகிய உருவம் மண்ணால் செய்யப்பட்ட பொம்மைக்கே ஒப்பாகும் என்று எடுத்துரைக்கின்றார்.ஆடை இல்லாதவனை அணிகள் அழகுறச் செய்யாதது போல அறிவு இல்லாதவனைச் செல்வம் பெருமையுறச் செய்யாது என்பதை,

"அறிவினால் மாட்சியொன்று இல்லா ஒருவன்

பிறிதினால் மாண்டது எவனாம் - பொறியின்

மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன

அணியெல்லாம் ஆடையின் பின்" [78]

எனும் பழமொழிநானூறுப் பாடலில் முன்றுறையரையனார் எடுத்துரைக்கின்றார். அணிகலன்கள் எல்லாம் ஆடைக்குப் பின்னரே மதிக்கப்படும். அதேபோன்று கல்விக்குப் பின்னரே மற்றவைகள் மதிக்கப்படும். எல்லா செல்வங்களினால் கிடைக்கின்ற மதிப்பைவிட கல்வியினால் கிடைக்கின்ற மதிப்பே சிறந்தது என்று விளக்குகின்றார். கல்விக்கு அழகு என்பது,

"கல்விக்கு அழகு கசடற மொழிதல்" [79]

என அதிவீரராமபாண்டியன் வெற்றிவேற்கைப் பாடல் மூலம் குறிப்பிடுகின்றார். கல்வி கற்றவனுக்கு அழகு என்பது தான் கற்ற கல்வியை குற்றமறச் சொல்லுவதாகும் என எடுத்துரைக்கின்றார். மக்களுக்கு கல்வி அழகே அழகாகும். மற்ற அணிகலன்களால் வருகின்ற அழகுகள் அழகு ஆகாது என்பதனை உணர்த்துகின்றது.

### அழியாப் படைப்பு

கல்விச் செல்வத்தைத் தவிர மற்ற செல்வங்கள் அனைத்தும் அழிந்துவிடக் கூடியதாகும். கல்விக்கு அழிவு இல்லை. ஒருவன் கற்ற கல்வியானது ஏழு பிறப்புக்கும் உதவும்,

> "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
> எழுமையும் ஏமாப்பு உடைத்து" [80]
> "கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
> மாடுஅல்ல மற்ற யவை" [81]

என்றக் குறட்பா வழி அறியலாம். ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் ஒருவனுக்கு ஏழு பிறப்பிலும் உதவும் தன்மை உடையதாகும். அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வி தவிர மற்றப்பொருள்கள் செல்வம் அல்ல. எல்லா செல்வங்களும் அழிந்துவிடக் கூடியது என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இக்கருத்தைப் போன்றே நாலடியாரிலும்,

> "வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
> மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
> எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
> விச்சைமற் றல்ல பிற" [82]

என்றப் பாடல் உணர்த்துகின்றது. கல்வியானது பிறரால் கவர்ந்து கொள்ளமுடியாது, பிறருக்கு கற்பிப்பதால் அழிந்துவிடாது, மக்களுக்குத் தேடி வைக்க வேண்டிய அழியாத செல்வம் கல்வியாகும் என்பதை எடுத்துரைக்கின்றது. இதே போன்று நான்மணிக்கடிகையில்,

“கற்றான் தளரின் எழுந்திருக்குங் கல்லாத
பேதையான் வீழ்வானேல் கால்முரியும் எல்லாம்
ஒருமைத்தான் செய்த கருவி தெரிவெண்ணின்
பொய்யாவித் தாகி விடும்” [83]

என்று விளம்பிநாகனார் விளக்குகின்றார். ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது மறுபிறப்பிலும் உதவும் என எடுத்துரைக்கின்றார். ஒருவன் கற்ற கல்வியானது அழியாமல் உறுதி உடையது என்பதனை நல்லாதனார்,

“வள்ளன்மை பூண்டான்கண் செல்வமும் உள்ளத்து
உணர்வுடையான் ஓதிய நூலும் - புணர்வின்கண்
தக்கது அறியும் தலைமகனும் இம்மூவர்
பொத்தின்றி காழ்த்த மரம்” [84]

எனும் திரிகடுகப்பாடல் மூலம் உரைக்கின்றார். கல்வி கற்றவர்கள் வயிரம் பாய்ந்த மரத்தைப்போல உறுதி உடையவர்களாக இருப்பார்கள் என்பதனை விளக்குகின்றார். கல்வி கற்கின்ற மாணவர்களுக்குக் கொடுத்து உதவ வேண்டியவைகள்,

“ஊணொடு கூறை எழுத்தாணி புத்தகம்
பேணொடும் எண்ணும் எழுத்திவை – மாணொடு
கேட்டெழுதி யோதிவாழ் வார்க்கீய்ந்தார் இம்மையான்
வேட்டெழுத வாழ்வார் விரிந்து” [85]

என ஏலாதிக் குறிப்பிடுகின்றது. கல்வி கற்கின்றவர்களுக்கு உதவிகள் செய்கின்றவர்கள் வீடுபேறு பெற்று உயர்வடைவார்கள் என்று கணிமேதாவியார் எடுத்துரைக்கின்றார். பொருள் செல்வம் அழிந்துவிடக் கூடியது. ஆனால் கல்வியாலான அறிவுச் செல்வம் அழியாது என்பதனை முன்றுறையரையனார்,

"அருவிலை மாண்கலனும் ஆன்ற பொருளும்
திருவுடையார் ஆயின் திரிந்தும் - வருமால்
பெருவரை நாட பிரிவின்று அதனால்
திருவினும் திட்பம் பெறும்" [86]

எனும் பழமொழிநானூறுப் பாடல் மூலம் உணர்த்துகின்றார். செல்வத்தினும் அறிவே உயர்வைப் பெறும் என்பதை எடுத்தியம்புகின்றார். நான்முகனால் படைக்கப்படும் உடலானது அழிந்துவிடக் கூடியதாகும். ஆனால் கற்றவர்களால் படைக்கப்படும் நூல்கள் அழிவதில்லை. இக்கருத்தை,

"கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் - மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு" [87]

என்று நீதிநெறிவிளக்கப் பாடல் மூலம் உணரமுடிகின்றது. மனிதன் இறந்த பின்பும் அழியாத புகழைத் தருவது கல்வியாகும். கல்வி கற்றவரே சிறந்தவராகக் கருதப்படுகின்றனர். கல்வி மட்டுமே அழியாதது என்பதனை அறியமுடிகிறது. மனிதனுக்கு துணையாய் வருவது கல்விதான் என்பதனை,

"துணையது வாய்வருந் தூயநற் சோதி
துணையது வாய்வருந் தூயநற் சொல்லாந்

துணையது வாய்வருந் தூயநற் கந்தந்

துணையது வாய்வருந் தூயநற் கல்வியே" [88]

எனத் திருமூலர் திருமந்திரத்தில் உரைக்கின்றார். மனிதனுக்கு இறுதிக் காலத்தில் துணையாய் வருவது பொன்னும், பொருளும், பெற்ற பிள்ளைகளும், கட்டிய மனைவியும் என எதுவுமே இல்லை. தேடிய புகழும், சொன்ன சொல்லும், கற்ற கல்வியுமே அவனுக்குத் துணையாய் வரும் என்று எடுத்துரைக்கின்றார்.கல்வியோ எவற்றாலும் அழியாது, எவராலும் கொள்ளப்படாது, கொடுக்கக் கொடுக்க வளர்ந்து கொண்டே போகும் என்பதனை,

"வெள்ளத்தே போகாது வெந்தணலில் வேகாது

கொள்ளத்தான் போகாது கொடுத்தாலும் குறையாது

கள்ளருக்கும் எட்டாது காவலுக்குள் அமையாது

உள்ளத்தே பொருள் இருக்க ஊரில் உழைத்துழல் வானேன்" [89]

என்னும் தனிப்பாடல் திரட்டாலும்,

"கொள்ளுநர் கொள்ளக் குறையா தாதலி

னிறையுள நீங்கா துறையரு ளாகியு

மவைமுதலாகி யிருவினை கெடுக்கும்

புண்ணியக் கல்வி யுண்ணிகழ் மாக்கள்" [90]

என்னும் கல்லாடத்தாலும் நன்குணரப் பெறலாம். அழியும் ஏனைய செல்வங்களைக் காட்டிலும் அழியா அழகுடைய கல்வி மட்டுமே சிறந்த செல்வமாகும் என்பதை அறியமுடிகிறது.

## சென்ற இடமெல்லாம் சிறப்பு

கல்வியானது தன்னைக் கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பைக் கொடுக்கும். அரசர்களும் கற்றோருக்கு ஒப்பாக முடியாது. கல்வி கற்றவர்கள் எந்த நாட்டிற்குச் சென்றாலும், எந்த ஊருக்குச் சென்றாலும் சிறப்புப் பெறுவார்கள். எந்நாடும் அவர் நாடாம், எவ்வூரும் அவர் ஊராம். அவர்கள் அங்குள்ள அரசர், வள்ளல், செல்வர், ஏழைகள் முதலிய அனைவராலும் போற்றப்பட்டு உணவு முதலிய உதவிகளைப் பெறுவார்கள். அவ்வுதவி கைம்மாறு கருதியதன்று. உண்மையான உள்ளன்போடு செய்யப்படுவதாகும். கல்வி கற்றவனுக்கு வேறு நாடும் தன் நாடாகும் என்பதனை வள்ளுவர்,

> "யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு" [91]

என விளக்குகின்றார். கல்வி கற்றவனுக்கு எல்லா சிறப்புகளும் கிடைக்கும் என்பதை அறிந்து கல்வியை கற்றுக் கொள்ள வேண்டும். சாகும் வரை கல்வி கற்காமல் வாழக்கூடாது என்பதை எடுத்துரைக்கின்றார். கற்றாருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதனை,

> "ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அ∴துடையார்
> நாற்றிசையும் செல்லாத நாடில்லை – அந்நாடு
> வேற்றுநா டாகா தமவேயாம் ஆயினால்
> ஆற்றுணா வேண்டுவ தில்" [92]

எனும் பழமொழிநானூறுப் பாடல் உணர்த்துகின்றது. கற்றவர்களுக்கு எல்லா நாடும், எல்லா ஊரும் சொந்தமாகும். அதனால் அவர்கள் எங்கு சென்றாலும்

அவர்களுக்குத் தேவையான உணவுகளைக் கொண்டு செல்ல வேண்டியது இல்லை என்று முன்றுறையரையனார் கூறுகின்றார். கல்வி கற்றவர்களுக்கு என்றுத் தனியாக ஊர் இல்லை. இதனை,

“நல்லார்க்குந் தம்மூரென் றூரில்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றூரில்லை – யல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றூரில்லை தங்கைத்
துடையார்க்கும் எவ்வூரு மூர்” [93]

என்று விளம்பிநாகனார் நான்மணிக்கடிகைப்பாடலில் எடுத்துரைக்கின்றார். கல்வி அறிவு உடையவர்களுக்கு எல்லா ஊர்களும் சொந்த ஊர்களாகும் என்பதை அறியமுடிகின்றது.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” [94]

என்று புறநானூறுப் பாடலில் கணியன்பூங்குன்றனார் விளக்குகின்றார். கற்றவர்களுக்கு எல்லாம் சொந்த ஊர் அனைவரும் சுற்றத்தார் என்பதை அறிவுறுத்துகின்றார். அறிவுள்ளவனை அரசும் விரும்பி அழைக்கும் என்பதனை,

“அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்” [95]

என அதிவீரராமபாண்டியன் வெற்றிவேற்கைப்பாடல் மூலம் உணர்த்துகின்றார். கல்வி கற்றவர்களையும்,அரசனையும் ஒப்பிட்டுப்பார்த்தால் அரசனைவிட கல்வி கற்றவனே மேலானவன். இதனை,

“மன்னனும் மாசுஅறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்பு உடையன் - மன்னற்குத்

தன்தேசம் அல்லால் சிறப்பு இல்லை கற்றோர்க்குச்

சென்ற இடம் எல்லாம் சிறப்பு" [96]

என ஔவையார் எடுத்துரைக்கின்றார். அரசனைவிட புலவனே சிறப்புடையவன். அரசனுக்கு அவன் ஆட்சி செய்கின்ற நாட்டில் மட்டுமே சிறப்பு உண்டு. ஆனால் கல்வி அறிவுள்ள புலவர்களுக்குச் செல்லும் இடம் எங்குமே சிறப்புக் கிடைக்கும் என்பதை அறியமுடிகிறது. இதே போன்று,

"ஆனை மருப்பு மருங்கவரி மான்மயிருங்

கான வரியுகிருங் கற்றோரும் - மானே

பிறந்தவிடத் தன்றிப் பிறிதொரு தேசத்தே

செறிந்தவிடத் தன்றோ சிறப்பு" [97]

எனும் நீதிவெண்பாப் பாடல் விளக்குகின்றது. கல்வி கற்றவர்களுக்கு தாங்கள் பிறந்த இடத்தில் மட்டும் அல்லாமல் எல்லா இடங்களிலும் சிறப்படைவார்கள் என்பதை எடுத்துரைக்கின்றது.

**கல்வியின் இன்பம்**

கல்வியால் இன்பம் பெறலாம். இன்பம் எனினும் உவகை எனினும் பொருள் ஒன்றே. இவ்வுவகையினை,

"செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென

அல்லல் நீத்த உவகை நான்கே" [98]

எனும் தொல்காப்பிய நூற்பாவால் உணரலாம். கல்வியால் பெறுகின்ற இன்பமே சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. கல்வியால் உலக மக்களும் இன்பம் அடைவார்கள் என்பதனை வள்ளுவர்,

"தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்" [99]

"செவிஉணவிற் கேள்வி யுடையார் அவிஉணவின்
ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து" [100]

என எடுத்துரைக்கின்றார். கற்றறிந்த அறிஞர்கள் தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு அக்கல்வியை விரும்புவார்கள். கல்வி கற்றவர்கள் தேவர்களுக்கு ஒப்பாவர் என்பதை உணரமுடிகின்றது.கல்வி இன்பத்திற்கு ஈடு இணையாக எதுவும் இல்லை. இதனை நாலடியார்,

"தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எ.்.குடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்து
உம்ப ருறைவார் பதி" [101]

என்று எடுத்தியம்புகின்றது. தேவர்களின் உலகத்து இன்பத்தைவிட கல்வியின் இன்பம் சிறப்பானதாகும் என்பதை உணர்த்துகின்றது. கல்வி கற்றவர்களின் நட்பானது கரும்பைத் தின்றால் எப்படி இனிமையாக இருக்குமோ அதுபோல் இனிமையாக இருக்கும் என்பதனை நாலடியார்,

"கனைகடல் தண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியின் கரும்புதின் றற்றே – நுனிநீக்கித்
தூரின்தின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரமி லாளர் தொடர்பு" [102]

எனும் பாடல்வழி உணர்த்துகின்றது. கற்றோர் தொடர்பு வரவர வளர்ந்து இனிக்கும் தன்மை உடையது என எடுத்துரைக்கின்றது. ஒவ்வொரு நாளும் புதிய கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக கல்வி கற்காதவனைப் போல் எண்ணியே கல்வி கற்க வேண்டும் இதனை பழமொழிநானூறு,

“சொற்றொறும் சோர்வு படுதலால் சோர்வின்றிக்
கற்றொறும் கல்லாதேன் என்று வழியிரங்கி
உற்றொன்று சிந்தித்து உழன்றுஒன்று அறியுமேல்
கற்றொறுந்தான் கல்லாத வாறு” [103]

என்று விளக்குகின்றது. கல்வி இன்பத்தை அடைவதற்கு பல நூல்களைக் கற்க வேண்டும். அப்படி புதிய நூல்களைக் கற்பதால் புதிய புதிய கருத்துக்களை அறிந்து கொள்ள முடியும் என்பதை எடுத்துரைக்கின்றது. நாள் முழுமையும் இனிதாகப் படித்து அறிதலைக் காட்டினும் அறிஞர்களிடம் விரும்பிக் கேட்டலே நன்மை தரும் என்பதனை முன்றுறையரையனார்,

“உணற்கு இனிய இன்னீர் பிறிதுஉழிஇல் என்னும்
கிணற்று அகத்துத் தேரைபோல் ஆகார் - கணக்கினை
முற்றப் பகலும் முனியாது இனிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று” [104]

எனும் பழமொழிநானூறுப் பாடல் மூலம் உணர்த்துகின்றார். அறிஞர்களிடம் கேட்ட கேள்வி ஊன்றுகோல் போல உதவும் என்கிறார். இதே போன்று வள்ளுவரும்,

“இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்” [105]

என எடுத்துரைக்கின்றார். கல்வி அறிவுள்ள சான்றோர்களின் சொற்கள் வாழ்க்கைக்கு ஊன்றுகோல் போல பயன்படும் என்கிறார். கல்வி கற்பதனால் அறியாமை நீங்கும். இதனை விளம்பிநாகனார்,

"கற்பக் கழிமடம் அ∴கும் மடம் அ∴கப்
புற்கந்தீர்ந்து இவ்வுலகின் கோளுணருங் கோளுணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரும் அந்நெறி
இப்பா லுலகின் இசைநிறீஇ - உப்பால்
உயர்ந்த உலகம் புகும்" [106]

எனும் நான்மணிக்கடிகைப் பாடல் வழி விளக்குகின்றார். அறியாமை நீங்குவதால் மறுமையில் வீட்டுலகம் அடைய முடியும் என்று உணர்த்துகின்றார். நல்லொழுக்கம் என்பது கல்வியின் பயனாகும் என்பதனை,

"ஆசாரம் என்பது கல்வி அறஞ்சேர்ந்து
போகம் உடைமை பொருளாட்சி யார்கண்ணுங்
கண்ணோட்டம் இன்மை முறைமை தெரிந்தாள்வான்
உண்ணோட்டம் இன்மையும் இல்" [107]

என்று விளம்பிநாகனார் உரைக்கின்றார். கல்வியின் இன்பத்தை நுகர்வதற்கு நல்ல ஒழுக்க நெறியில் கற்க வேண்டும் என்கிறார். கல்வி கற்றுக் கொடுத்த ஆசிரியருக்கு உதவிகள் செய்வதினால் மட்டுமே கல்வியின் இன்பத்தை அடைய முடியும். இதனை,

"நேராமல் கற்றது கல்வி யன்று" [108]

என மதுரைக்கூடலூர்கிழார் உரைக்கின்றார். கற்பிக்கும் ஆசிரியனுக்கு உதவ வேண்டும் என்பதை அறியமுடிகின்றது. பிச்சை எடுத்தாயினும் கல்வியைக் கற்க வேண்டும். கற்பனவற்றைக் கசடறக் கற்றல் மிக இனிமையானது என்று பூதஞ்சேந்தனார்,

“பிச்சைபுக் காயினுங் கற்றல் மிகஇனிதே
நற்சவையில் கைக்கொடுத்தல் சாலவும் முன்னினிதே
முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே
தெற்றவும் மேலாயார்ச் சேர்வு” [109]

என்ற இனியவைநாற்பதுப் பாடல் மூலம் எடுத்துரைக்கின்றார். கற்ற கல்வியை சான்றோர்கள் கூடியிருக்கின்ற சபையில் எடுத்துரைப்பது இனிமை உடையதாகும். சபைக்கு நன்மையாவது நல்லோர் கூடியிருத்தல். அதனை,

“நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே” [110]

என்று ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் மூலம் அறியமுடிகின்றது. இக்கருத்தைப் போன்றே நீதிநெறிவிளக்கத்திலும்,

“நெடும்பகற் கற்ற அவையத் துதவா
துடைந்துளா ருட்குவருங் கல்வி – கடும்பகல்
ஏதிலான் பாற்கண்ட இல்லினும் பொல்லாதே
தீதென்று நீப்பரி தால்” [111]

எனக் குமரகுருபரர் எடுத்துரைக்கின்றார். கற்ற கல்வியானது சான்றோர்கள் கூடியிருக்கின்ற சபையில் கைகொடுத்து உதவும் என்கிறார். இதே போன்று இனியவை நாற்பதில்,

"கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே" [112]

என்று பூதஞ்சேந்தனார் உரைக்கின்றார். கற்றவர்களுக்கு முன்பு தாம் கற்ற கல்வியை எடுத்துரைத்தல் இனிமை உடையதாகும் என்கிறார். கற்றுக் கொள்ளும் தகுதி உடையவர்களுக்கே தாம் அறிந்த அறிவுநூற் பொருள்களைக் கூறுதல் வேண்டும் என்பதை,

"கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉங்
குற்றந் தமதே பிறிதன்று – முற்றுணர்ந்தும்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன்" [113]

என்று குமரகுருபரர் நீதிநெறிவிளக்கப் பாடலில் உணர்த்துகின்றார். கற்றுக்கொள்ள விருப்பம் இல்லாதவர்களிடம் கல்வி பற்றி உரைக்க வேண்டாம். விரும்பி ஏற்றுக் கொள்பவர்களிடம் உரைப்பதால் பயன்கிடைக்கும் என்கிறார். அறிவை வளர்க்கும் பல நூல்களையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதனை ஔவையார்,

"நூல் பல கல்" [114]

எனும் ஆத்திசூடிப் பாடல் மூலம் விளக்குகின்றார். பல நல்ல நூல்களைக் கற்க அறிவு வளரும் என்பதை எடுத்துரைக்கின்றார். இக்கருத்தைப் போன்றே கொன்றை வேந்தனில்,

"நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை" [115]

என்று ஔவையார் எடுத்துரைக்கின்றார். நிலையானக் கல்வி கற்பது என்பது சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதாகும். பல நூல்களைக் கற்றவர்கள் வாக்குறுதி உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்கிறார். கற்றறிந்த பெரியோர் எவ்வித உதவியும் பெறாமல் உடல் வருந்தி இயன்ற உதவியைச் செய்வார்கள் என்பதை,

"கைம்மாறு உகவாமல் கற்று அறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயல் உதவி தாம் செய்வர்" [116]

எனும் நன்னெறிப் பாடல் உணர்த்துகின்றது. கைமாறு கருதாமல் உதவி செய்வதே கல்வி கற்றவர்களின் பண்பாகும் என்பதை எடுத்துரைக்கின்றது. இதே போன்று நீதி வெண்பாவிலும்,

"பாலினீர் தீயணுகப் பால்வெகுண்டு தீப்புகுந்து
மேலுநீர் கண்டமையும் மேன்மைபோல் - நூலினெறி
உற்றோ ரிடுக்கண் உயிர்கொடுத்தும் மாற்றுவரே
மற்றோர் புகல மதித்து" [117]

என உணர்த்துகின்றது. கற்றவர்கள் தம்மைச் சேர்ந்தாரின் துன்பத்தை நீக்குவார்கள் என்று எடுத்துரைக்கின்றது. கல்வி கற்பதற்கு தொடங்குங் காலத்தில் துன்பம் தருவதாகிப் பின்பு இன்பத்தைக் கொடுக்கும். இதனைக் குமரகுருபரர்,

"தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்
மடங்கொன் றறிவகற்றுங் கல்வி" [118]

எனக் கூறுகின்றார். கல்வியானது அறியாமையை நீக்கி அறிவை பெருகச் செய்யும் என்று உணர்த்துகின்றார். கல்வியின் இன்பத்தை மாணிக்கவாசகர்,

> "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
> உறைவான் உயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்
> துறைவாய் நுழைந்த னையோவன்றி யேழிசைச் சூழல்புக்கோ
> இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தியதே" [119]

எனும் திருச்சிற்றம்பலக்கோவையாரில் உணர்த்துகின்றார். கல்வி கற்பதனால் இன்பம் அடைய முடியும் என்பதை அறியமுடிகின்றது. மதம் பிடித்து முறை தவறி நடக்கும் யானையைப் பாகன் அடக்குவான். அதுபோல மடங்கொண்டு முறை தவறி நடக்கும் மக்களைக் கல்வி திருத்தும் இதனை மணிமேகலை என்னும் காவியத்தில் உள்ள,

> "கல்விப் பாகரிற் காப்புவலை யோட்டி" [120]

என்னும் அடியாலும், சிலப்பதிகாரம் என்னும் காவியத்தில் உள்ள,

> "இடங்கழி நெஞ்சத்து இளமை யானை
> கல்விப் பாகன் கையகப் படாஅது
> ஒல்கா வுள்ளத் தோடு மாயினும்" [121]

என்னும் அடிகளாலும் அறியலாம். இது குறித்தே பெரியோர்கள் கல்வியை யானைப் பாகனாக உருவகம் செய்துள்ளனர். கற்றவர்கள் தீமைக்கு அஞ்சுவார்கள். கல்வியின் இன்பத்தை அடைவதற்கு ஒழுக்க நெறியில் நடக்க

வேண்டும் என்கிறது. காதால் கேட்டாயினும் கல்வி இன்பத்தை நுகர வேண்டும். இதனை,

"செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்" [122]

என்னும் குறள் விளக்குகின்றது. கல்வி கற்றவர்கள் கூறுவதைக் கேட்டாயினும் செவியின்பம் பெறலாம். இச்செவியின்பமும் பெறாவிட்டால் செவிகளைப் பெற்றும் பயனில்லை என்று வள்ளுவர் உரைக்கின்றார். கல்வி இன்பம் பற்றி திருவிளையாடற் புராணத்தில் உள்ள,

"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ" [123]

என்னும் செய்யுட் பகுதி உணர்த்துகின்றது. சிவன், சக்தி, முருகன் ஆகியோர் நூல் இன்பத்தை பெற்றனர் என எடுத்துரைக்கின்றது. தெய்வங்களே நூல் இன்பத்தில் பெரும் பித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. தெய்வங்களே அப்படி இருக்கும் போது மக்களாகிய நாம் கல்வி இன்பத்தைக் கட்டாயம் விரும்ப வேண்டும் என்பதை அறியமுடிகிறது. கற்கின்றவர்க்கு தாம் கற்ற கல்வியே கற்புடைய மனைவியாகும் என்பதனைக் குமரகுருபரர்,

"கல்வியே கற்புடைப் பெண்டீர்" [124]

எனும் நீதிநெறிவிளக்கப்பாடல் மூலம் உணர்த்துகின்றார். பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைப்பதற்கு முன் கல்வி மணத்தைக் கைகூட்டி வைப்பதே கட்டாயக் கடமையாகும் என்கிறார். கல்வியால்தான் வீடுபெற முடியும் என்பதை,

"பொய்தீர் புலவர் பொருள்புரிந் தாராய்ந்த

மைதீர் உயர்கதி" [125]

என்னும் ஏலாதிப் பாடலாலும்,

"கற்றவர் பேரின்பம் உற்றுநின் றாரே" [126]

என்னும் திருமந்திரப் பாடலாலும் அறிந்து கொள்ளமுடிகிறது. கல்வியறிவு பெற்ற பெரியோர்களாலேயே எளிதில் வீடுபேறு பெறமுடியும். கல்லாதவர்களுக்கு இவ்வின்பம் கிடைக்காது. அதனால் கல்வியால் வீடுபெற முடியும் என்பதை உணரமுடிகின்றது. கற்றவர்கள் இடையில் தளர்ந்து சோர்ந்து போனாலும் பிறகு எழுந்துவிடுவார்கள் என்பதனை நல்லாற்றூர் சிவப்பிரகாச அடிகளார்,

"தளர்ந்துழி யுதவுங் கல்வி தானென" [127]

என்று பிரபுலிங்கலீலைப் பாடல் வழி உணர்த்துகின்றார். கல்வி கற்றவர்கள் தமது கல்வி திறமையைக் காட்டி வாழ்ந்து கொள்வார்கள் என்று எடுத்துரைக்கின்றார். மக்களுக்குத் தளர்ச்சி என்னும் மயக்க இருளைப் போக்கி ஒளிதரும் என்பதனைச் சீத்தலைச்சாத்தனார்,

"பிடித்த கல்விப் பெரும் புணை விடூஉம்" [128]

என்று மணிமேகலைக் காவியத்தில் உணர்த்துகின்றார். தண்ணீரில் மூழ்கித் தத்தளிப்பவனுக்கு ஒரு தெப்பம் கிடைக்குமாயின் அவன் அதன் துணை கொண்டு கரையேறுவான். அதுபோலவே வாழ்க்கைக் கடலில் மூழ்கித் தத்தளிக்கும் மக்களுக்கு கல்வியானது ஒரு தெப்பம் போன்றது என்று உரைக்கின்றார்.பணிந்து ஒழுகுவதே உண்மையில் கற்றோருக்கு அடையாளமாகும். இதனைத்

திருத்தக்கத்தேவர் ஓர் ஒப்புமையின் வாயிலாக நயம்பெற உணர்த்தியுள்ளார். அதாவது,

“சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தின்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே” [129]

என்னும் சீவகசிந்தாமணிப் பாடலால் அறியலாம். நெற்பயிர்கள் தொடக்கத்தில் பச்சைப் பாம்பின் தோற்றத்துடன் வளர்ந்து, கருத்தாங்கி, இடையில் செல்வம் பெற்ற அற்பர்கள் சிலர்போல் தலைகனத்து நிமிர்ந்து, இறுதியில் தேர்ந்தநூற் கல்வியுடையோர் போல் தலைவணங்கி காய்த்தனவாம். அதுபோல கற்றவர்கள் பணிந்து நடப்பதே அவர்களுக்கு உயர்வைத் தரும் என எடுத்தியம்புகிறார். கல்வியில் சிறந்தவர்கள் ஆராய்ந்து முடிவெடுப்பார்கள் என்பதனை ஐயனாரிதனார்,

“தொடைவிடை ஊழாத் தொடைவிடை துன்னித்
தொடைவிடை ஊழிவை தோலாத் - தொடைவேட்டு
அழிபடல் ஆற்றால் அறிமுறையேன் றெட்டின்
வழிபடர்தல் வல்ல தவை” [130]

எனும் புறப்பொருள் வெண்பாமாலைப் பாடலில் உணர்த்துகின்றார். கற்றவர்கள் நுண்ணறிவுடன் ஆராய்ந்து தீர்ப்புக் கூறுவார்கள் என உரைக்கின்றார். நூற்பயன் பற்றி நன்னூலார்,

“அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற் பயனே” [131]

என எடுத்துரைக்கின்றார். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களும் கல்வியால் மக்களுக்குக் கிடைக்கும் பயன் எனக் கூறுகின்றார். இதே போன்று குமரகுருபரர்,

> "சொல்வன்மை யின்றெனின் என்னாம் அ∴துண்டேல்
>
> பொன்மலர் நாற்ற முடைத்து" [132]

எனும் நீதிநெறிவிளக்கப் பாடலில் உணர்த்துகின்றார். கல்வியோடு சொல்வன்மையும் கூடியுள்ள புலமையே பொன்மலர் கூட மணமும் பெற்றவாறு இருக்கும். அவரையே கற்றவராகக் கருதமுடியும் என்கிறார்.

## இயல் சுருக்கம்

அற இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள கல்விச் சிந்தனைகள் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது. திருக்குறளில் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை முதலான அதிகாரங்களின் வழி கல்வியின் முக்கியத்துவத்தை அறியமுடிகின்றது.

மணற்கேணியைத் தோண்டிய அளவிற்கு நீர் சுரப்பது போல ஒருவன் கல்வியை கற்ற அளவிற்கு அறிவு வளரும். பல நூல்களைக் கற்பதால் புதிய புதிய கருத்துக்களை அறிந்து கொள்ளமுடியும் என்பதை தெளிவுப்படுத்தப்பட்டு உள்ளது. உயர்ந்த குடியில் பிறப்பதைவிட, கையில் இருக்கிற பொருளைவிட கல்வி கற்பதனால் உயர்வு அடைய முடியும். கல்வியே உண்மைப் பொருளாகும் என்பதனை உணரமுடிகின்றது.

கல்வி கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர் தெய்வத்திற்குச் சமமாவார். அவருக்குக் கொடுக்க வேண்டிய குருகாணிக்கையைச் சரியாகக் கொடுக்க வேண்டும். ஆசிரியருக்கு பல உதவிகள் செய்ய வேண்டும் என எடுத்துரைக்கப்பட்டுள்ளது. செல்வங்களில் எல்லாம் தலைசிறந்த செல்வம் என்பது கல்விச் செல்வமே ஆகும். அப்படிப்பட்ட கல்விச் செல்வத்தை ஒருநாளும் கற்காமல் இருக்கக் கூடாது. பிச்சை எடுத்தாவது கல்வியைக் கற்க வேண்டும். கற்பதினால் உயர்வடைய முடியும் என்று விளக்கப்பட்டுள்ளன.

மக்கள் பிறப்பைப் போன்று சிறந்த பிறப்பு வேறு எதுவுமில்லை.அப்படிப்பட்ட மக்கள் பிறப்பில் கல்வி கற்று, கற்றபடி நடக்க வேண்டும். கற்றபடி ஒழுகாதவன் தாமரைப்பூ கல்பட்டு சிதைவது போல் துன்பத்தால் சிதைந்து அல்லல்படுவான்

என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சிலநாளே வாழ்ந்து மடியும் இந்த நிலையற்ற உடம்பினால் எந்தப் பயனும் இல்லை. நிலையாக நிற்கும் கல்வியைக் கற்று வாழ்வதே உயர்ந்த வாழ்வாகும் என விளக்கப்பட்டுள்ளன.

கற்றவர்களுக்கு எல்லா நாடும், எல்லா ஊர்களும் சொந்தமாகும். அவர்களுக்கு என்றுத் தனியாக ஊர்கள் இல்லை. அவர்கள் சென்ற இடமெல்லாம் சிறப்படைவார்கள். நாட்டை ஆளுகின்ற அரசர்களும் கற்றறிந்த புலவர்களுக்கு ஒப்பாகமாட்டார்கள் என்பதை அறியமுடிகின்றது.

கல்வி என்பது இளமைப் பருவத்தில் கற்க வேண்டியதாகும். இளமையில் கல்வியைக் கற்றுக்கொண்டால் அது மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்து கொள்ளும். இளமையில் கற்கின்ற கல்வியே என்றும் மறவாமல் பயன்படுவதாகும். இளமைப் பருவத்தை வீணாகக் கழிக்காமல் கல்வி கற்றால் வாழ்க்கையில் சிறப்படையலாம் என விளக்கப்பட்டுள்ளது.

கல்வி நல்வாழ்க்கையாகிய இம்மைப்பயனை விளைவிக்கும். பிறருக்குக் கற்றுக்கொடுப்பதால் குறைவுபடுதல் இல்லை. கல்வி கற்றவர்களை அறிவாலும், புகழாலும் உயரச்செய்யும். கல்வி அறியாமை மயக்கத்தைத் தீர்க்கும் மருந்து என எடுத்துரைக்கப்பட்டுள்ளன. தன்னை நாடி வருகின்றவர்களுக்கு நூல்களின் கருத்துக்களைத் தெளிவாக விளக்கிக் கூறுவது கல்வி கற்றவர்களின் கடமைகளாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. பாம்பினுடைய கால்களைத் தமக்கு இனமாகிய பாம்புகளே அறியும் தன்மையுடையன. அதுபோல கற்றோர் பெருமையைக் கற்றோரால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும் என்று உணர்த்தப்பட்டுள்ளன.

கல்வி கற்காதவன் கற்றவனைப்போல் நடித்தாலும் அவன் கல்வி கற்காதவனாகவே கருதப்படுவான். கற்றவர்களுக்கு மயிலையும், கற்காதவர்களுக்கு வான்கோழியையும் ஒப்புமைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன. மகனை கல்வி கேள்விகளில் சிறந்த சான்றோனாக்குதல் தந்தையின் கடமைகளில் ஒன்றாகும். தந்தை தன் மகனுக்குச் செய்யத்தக்க நல்ல உதவி கற்றவர் கூட்டத்தில் தன் மகன் கல்வியில் மேம்படச் செய்தலாகும் என்பதை விளக்கப்பட்டுள்ளது.

கல்வி கற்க முடியாவிட்டாலும் கற்றறிந்தவரிடம் கேட்டறிய வேண்டும். அது ஒருவனுக்கு வாழ்க்கையில் தளர்ச்சி வந்த போது ஊன்றுகோல்போல் துணையாகும் என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளன. எப்பொழுதும் படித்துக் கொண்டே இருக்க வேண்டும். எவ்வளவு கற்றிருப்பினும் அதனை ஒரு கைப்பிடி மண்ணின் அளவாகவே கருத வேண்டும். கல்வியைக் கற்கக் கற்கத்தான் அறிவு மேலும் மேலும் வளரும் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கல்விக்கு வயது வேற்றுமை இல்லை. கற்றவர் எவ்வளவு சிறியவராய் இருப்பினும் எவ்வளவு பெரிய செயல்களையும் செய்து முடிக்கும் ஆற்றல் உடையவர்கள் ஆவார்கள். பெரிய தேரைச் செலுத்துவது சிறிய அச்சாணியாகும். மடலால் பெரிய தாழம்பூவைக் காட்டிலும், மடலால் சிறிய மகிழம்பூ மிகுந்த மணத்தைக் கொடுக்கும். உருவத்தால் பெரிய கடல் குளிக்கவும் உதவுவது இல்லை. சிறிய ஊற்றுநீரே குடிக்கவும் உதவுகின்றது. அதுபோல உடலாலும், வயதாலும் சிறியவர் என்று இகழ்ந்துவிடக் கூடாது. அவர்தம் கல்விப்பெருமையினையே நோக்க வேண்டும் என்பதை அறியமுடிகின்றது.

ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் ஒருவனுக்கு ஏழுபிறப்பிலும் உதவும் தன்மை உடையதாகும். கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு உண்டாகும். அறம், பொருள், இன்பம், வீடுபேறு அடைவதற்கு கல்வியே சிறந்த ஊன்றுகோலாகும் என்பவை பற்றி ஆராயப்பட்டுள்ளன.

## குறிப்புக்கள்

1. மு.வரதராசனார், திருக்குறள், பா.391, ப.83.
2. மேலது, பா.396, ப.83.
3. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா.132, ப.107.
4. மேலது, பா.133, ப.107.
5. துரை.இராசாராம், பதினெண்கீழ்கணக்கு (மூன்றாம்பகுதி), திரிகடுகம், பா.32, ப.21.
6. மேலது, சிறுபஞ்சமூலம், பா.20, ப.119.
7. மேலது, முதுமொழிக்காஞ்சி, சிறந்தபத்து, பா.3, ப.170.
8. மேலது, பா.7,ப.171.
9. மேலது, அறிவுப்பத்து, பா.14,ப.173.
10. ம.இராசமாணிக்கம் பிள்ளை, பழமொழிநானூறு, பா.8. ப.7.
11. மேலது, பா.7,ப.7.
12. மேலது, பா.9,ப.8.
13. தி.சு.பாலசுந்தரம் பிள்ளை (இளவழகனார்), பதினெண்கீழ்க்கணக்கு கடுகங்கடிகை மாமூலம், நான்மணிக்கடிகை, பா.22. பா.வ: 3-4, ப.24,
14. முல்லை முத்தையா, நீதிநூல்கள், ஆத்திசூடி, பா.100, ப.26.
15. மேலது, பா.39,ப.16.
16. மேலது, கொன்றைவேந்தன், பா.22, ப.33.
17. மேலது, பா.91, ப.47.
18. மேலது, வெற்றிவேற்கை,பா.1,ப.57.
19. மேலது, பா.14, ப.58.

20. மேலது, பா.35, ப.61.

21. மேலது, பா.37, ப.61.

22. மேலது, பா.38,ப.62.

23. மேலது, மூதுரை, பா.14, ப.77.

24. மேலது, உலகநீதி, பா.1, ப.48.

25. மேலது, நன்னெறி, பா.7, ப.117.

26. மேலது, பா.40, ப.137.

27. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நீதிநூற்கொத்து(இரண்டாம்பாகம்), நீதிவெண்பா, பா.15, ப.20.

28. முல்லை முத்தையா, மு.கூ.நூ, நன்னெறி, பா.35, ப.134.

29. ஆ.பொன்னுசாமிப்பிள்ளை, நீதிநூற்கொத்து (இரண்டாம் பாகம்), அறநெறிச்சாரம், பா.71, ப.40.

30. மேலது, பா.72, ப.41.

31. மேலது, பா.73, ப.41.

32. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நீதிநூற்கொத்து(இரண்டாம்பாகம்), நீதிநெறிவிளக்கம், பா.2, ப.8.

33. மேலது, பா.10, ப.15.

34. மேலது, பா.14, ப.19.

35. செ.ரெ.இராமசாமிபிள்ளை, விவேகசிந்தாமணி, பா.8, ப.9.

36. கோ.இளையபெருமாள், புறநானூறு, பா.183, ப.153.

37. மு.வரதராசனார், மு.கூ.நூ,பா.409, ப.85.

38. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா.136, ப.110.

39. கோ.இளையபெருமாள், மு.கூ.நூ, பா.312, பா.வ: 2, ப.232.

40. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.67,ப.15.

41. மேலது, பா.69, ப.15.

42. மேலது, பா.70, ப.15.

43. சாமி.சிதம்பரனார், கம்பராமாயணம் தொகுதி, அயோத்தியாகாண்டம், வசிட்டன்மந்திரப்படலம், ப.142.

44. திரு.வி.கலியாணசுந்தரனார்,மா.பாலசுப்பிரமணியமுதலியார், திருத்தொண்டர்புராணம் (பெரியபுராணம்) பா.1290,ப.457.

45. திவாகரமுனிவர், சேந்தன் திவாகரம், ப.252.

46. ம.இராசமாணிக்கம்பிள்ளை, மு.கூ.நூ, பா.5, பா.வ: 4, ப.5.

47. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.414, ப.87.

48. மேலது, பா.415, ப.87.

49. மேலது, பா.416, ப.87.

50. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்),நாலடியார்,பா.139, பா.வ: 1-2, ப.112.

51. சிவ.கன்னியப்பன், தனிப்பாடல் திரட்டு, பா.9, ப.128.

52. மேலது, பா.40, ப.144.

53. முல்லை முத்தையா, மு.கூ.நூ, மூதுரை, பா.12, ப.76.

54. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.667, ப.137.

55. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்),நாலடியார், பா.135, ப.109.

56. ம.இராசமாணிக்கம்பிள்ளை, மு.கூ.நூ,பா.1, ப.3.

57. துரை.இராசாராம், மு.கூ.நூ, திரிகடுகம், பா.56, ப.32.

58. மேலது, சிறுபஞ்சமூலம், பா.56, ப.136.

59. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்),மு.கூ.நூ,நான்மணிக்கடிகை, பா.94,பா.வ:1,ப.83.

60. முல்லை முத்தையா, மு.கூ.நூ, ஆத்திசூடி, பா.22, ப.13.

61. மேலது, பா.29, ப.14.

62. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்),மு.கூ.நூ, நீதிவெண்பா, பா.7, ப.11.

63. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.392, ப.83.

64. மேலது, பா.393, ப83.

65. ம.இராசமாணிக்கம்பிள்ளை, மு.கூ.நூ, பா.260, ப.184.

66. முல்லை முத்தையா, மு.கூ.நூ, ஆத்திசூடி, பா.7, ப.10.

67. மேலது, கொன்றைவேந்தன், பா.7, ப.30.

68. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), மு.கூ.நூ, நீதிவெண்பா, பா.10, ப.13.

69. ப.இராமநாதபிள்ளை, அ.சிதம்பரனார், திருமந்திரம் (முதற்பகுதி), பா.278, ப.121.

70. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்),நாலடியார், பா.131,ப.106.

71. துரை.இராசாராம், மு.கூ.நூ, சிறுபஞ்சமூலம், பா.37, ப.127.

72. மேலது, ஏலாதி, பா.74, ப.236.

73. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), மு.கூ.நூ, நீதிநெறிவிளக்கம், பா.13, ப.18.

74. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.404, ப.85.

75. மேலது,பா.405, ப.85.

76. மேலது, பா.406, ப.85.

77. மேலது, பா.407, ப.85.

78. ம.இராசமாணிக்கம்பிள்ளை, மு.கூ.நூ, பா.26, ப.19.

79. முல்லை முத்தையா, மு.கூ.நூ, வெற்றிவேற்கை, பா.2, ப.57.

80. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.398, ப.83.

81. மேலது, பா.400, ப.83.

82. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்),நாலடியார், பா.134, ப.108.

83. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்),மு.கூ.நூ, நான்மணிக்கடிகை, பா.75, ப.68.

84. துரை.இராசாராம், மு.கூ.நூ, திரிகடுகம், பா.75, ப.40.

85. மேலது, ஏலாதி, பா.63, ப.230.

86. ம.இராசமாணிக்கம்பிள்ளை, மு.கூ.நூ,பா.33, ப.24.

87. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்),மு.கூ.நூ,நீதிநெறிவிளக்கம், பா.7,ப.13.

88. ப.இராமநாதபிள்ளை, அ.சிதம்பரனார், மு.கூ.நூ, பா.281, ப.123.

89. கருப்பக்கிளர் சு.அ.இராமசாமிப்புலவர், தனிப்பாடல் திரட்டு, ஐந்தாம் பகுதி, பா.356, ப.249.

90. பொ.வே.சோமசுந்தரனார், கல்லாடம், பா.வ:21-24, ப.101.

91. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.397, ப.83.

92. ம.இராசமாணிக்கம்பிள்ளை, மு.கூ.நூ, பா.4,ப.5.

93. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), மு.கூ.நூ, நான்மணிக்கடிகை, பா.84, ப.75.
94. கோ.இளையபெருமாள், மு.கூ.நூ, பா.192, பா.வ: 1, ப.157.
95. முல்லை முத்தையா, மு.கூ.நூ, வெற்றிவேற்கை, பா.39, ப.62.
96. மேலது, மூதுரை, பா.26, ப.85.
97. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), மு.கூ.நூ, நீதிவெண்பா, பா.27, ப.28.
98. இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம், பொருளதிகாரம், மெய்பாட்டியல், பா.255, ப.355.
99. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.399, ப.83.
100. மேலது, பா.413, ப.87.
101. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்), நாலடியார், ப.137, ப.110.
102. மேலது, பா.138, ப.111.
103. ம.இராசமாணிக்கம்பிள்ளை, மு.கூ.நூ, பா.2, ப.3.
104. மேலது, பா.5, ப.5.
105. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.415, ப.87.
106. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்),மு.கூ.நூ,நான்மணிக்கடிகை, பா.30,ப.31.
107. மேலது, பா.96, ப.84.
108. துரை.இராசாராம், மு.கூ.நூ,முதுமொழிக்காஞ்சி, அல்லபத்து, பா.46, ப.180.
109. வா.மகாதேவ முதலியார், நானாற்பது, இனியவைநாற்பது, பா.1, ப.6.
110. கோ.இளையபெருமாள், மு.கூ.நூ,பா.187, ப.155.
111. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்),மு.கூ.நூ, நீதிநெறிவிளக்கம்,பா.8,ப.14.
112. வா.மகாதேவ முதலியார், மு.கூ.நூ, பா.16, பா.வ:1, ப.20.
113. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), மு.கூ.நூ, நீதிநெறிவிளக்கம், பா.25,ப.31.
114. முல்லை முத்தையா, மு.கூ.நூ, ஆத்திசூடி, பா.70, ப.21.

115. மேலது, கொன்றைவேந்தன், பா.50, ப.39.
116. மேலது, நன்னெறி, பா.27, பா.வ: 1-2, ப.129.
117. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்), மு.கூ.நூ, நீதிவெண்பா, பா.77, ப.63.
118. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்),மு.கூ.நூ, நீதிநெறிவிளக்கம், பா.3, ப.9.
119. ரா.விசுவநாதய்யர், திருச்சிற்றம்பலக்கோவையார், ப.25.
120. ந.மு.வேங்கடசாமிநாட்டார், ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, மணிமேகலை,உதயகுமரன் அம்பலம் புக்க காதை,பா.வ: 165, ப.239.
121. ந.மு.வேங்கடசாமிநாட்டார், சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், கட்டுரைகாதை, பா.வ:37-39, ப.240.
122. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.412,ப.87.
123. ந.மு.வேங்கடசாமி நாட்டார், திருவிளையாடற்புராணம், மதுரைக்காண்டம், திருநாட்டுச்சிறப்பு, ப.64.
124. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்),மு.கூ.நூ, நீதிநெறிவிளக்கம், பா.4, ப.10.
125. துரை.இராசாராம், மு.கூ.நூ, ஏலாதி, பா.66, ப.232.
126. ப.இராமநாதபிள்ளை, அ.சிதம்பரனார், மு.கூ.நூ, பா.285, பா.வ: 4, ப.125.
127. சு.அ.இராமசாமிப்புலவர், பிரபுலிங்க லீலை, பா.34, பா.வ: 1, ப.47.
128. ந.மு.வேங்கடசாமிநாட்டார், ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, மு.கூ.நூ, பாத்திரம் பெற்ற காதை, பா.வ: 77, ப.147.
129. உ.வே.சாமிநாதையர், சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், பா.53, ப.34.
130. பொ.வே.சோமசுந்தரனார், புறப்பொருள்வெண்பாமாலை, வாகைப்படலம், அவைய முல்லை, பா.19, ப.183.
131. சோமஇளவரசு, நன்னூல், எழுத்ததிகாரம், பா.10, ப.7.
132. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), மு.கூ.நூ, நீதிநெறிவிளக்கம், பா.5, பா.வ: 3-4, ப.11.